சிறு தொழில்களை ஊக்குவிக்க வேண்டும், ஊக்குவிக்கப் போகிறோம், சிறு தொழில் வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். சிட்கோ என்ற நிறுவனம் இருக்கிறது. அதனால் எந்தவிதமான பலனும் இல்லை. தொல்லை தான் வளர்ந்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மெட்ராஸ் மெட்ரோபாலிடன் டெவலப்மென்ட் அதாரிட்டி என்று ஒன்று ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. அவர்கள் எதற்காக என்றால் இன்று சென்னையில் இருக்கும் வீடு கட்டும் திட்டத்திற்காக பிளானை அவர்களிடம் தந்து அவர்கள் ஒப்புதல் பெற வேண்டும். அவர்கள் அதைச் செய்தார்களா என்றால் இல்லை. சென்னை மாநகராட்சியும் அதைச் செய்யவில்லை. இப்படி இரண்டும்கெட்டான் நிலை இருக்கிறது. இதைப் போக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது) முடித்து விடுகிறேன்.

இன்றையதினம் குழந்தைகளுக்கு உணவு மறுக்கப்பட்டு இருக்கிறது. புரட்சித் தலைவர் உள்ள ஆட்சியில் புரட்சிக் கவிஞனின் எண்ணத்தை, அவன் படைத்த ஒரு கவிதையைச் சொல்ல விரும்புகிறேன்.

குழந்தைகளுக்கு உணவில்லை என்று சொன்ன கோனை ஒழித்துவிடுவோம் என்று சொன்னான். ஆகவே, அந்தக் குறையைப் போக்க அந்த ஏழை எளிய மக்களுக்கு உணவு அளிக்க வேண்டும் என்று கேட்டு, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, சென்னையில் இருப்பவர்களுக்கு பேச அதிக நேரம் கொடுக்க வேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன்.

(3) அறிவிப்புகள்.—(தொடர்ச்சி)

(ஈ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

20—3—1979 ஆம் தேதியன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்துள்ள முடிவின்படி, மாறுதல் செய்யப்பெற்ற பேரவையின் அலுவல்கள் பற்றிய விவரம்.

1979 மார்ச் 20]

21—3—1979 (புதன்கிழமை)—

1. 1979–80 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீதான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு—ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்.

2. 1979–80 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம் (தொடர்ச்சி)..........

22—3—1979 (வியாழக்கிழமை)—

1979–80 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கைமீது பொது விவாதம் (கடைசி நாள்).

23—3—1979 (வெள்ளிக்கிழமை)—

கேள்வி நேரம் இல்லை.

9 மணி முதல் 10 மணி வரை :—

1. 1978–79 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

2. ஷை சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல்.

3. 1971–72 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

4. ஷை சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல்.

10 மணி முதல் 1-30 மணி வரை.

1979–80 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும்.

28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

34—நகர்ப்பகுதி மேம்பாடு.

24—3—1979 (சனிக்கிழமை)—

1. 1978–79 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் மீதான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு—ஆய்வு செய்தலும், நிறைவேற்றலும்.

2. 1971–72-ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு—ஆய்வு செய்தலும், நிறைவேற்றலும்.

3. 1979–80 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும்.

6—பத்திரப் பதிவு.

23—கூட்டுறவு.

57—பல்வகை மூலதனச் செலவு.

11—4—1979 (புதன்கிழமை) எடுத்துக்கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்த மானியக் கோரிக்கைகள்—

35—நுகர்பொருள் வழங்கல்.

21—மீனளம்—ஆகியவை 19—4—1979 (வியாழக்கிழமை) அன்று எடுத்துக் கொள்ளப்படும்.

19—4—1979 (வியாழக்கிழமை) எடுத்துக் கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்த மானியக் கோரிக்கைகள்—

1—நிலவரித் துறை.

2—மாநில ஆயத்தீர்வை.

4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகமும்.

5—முத்திரைத் தாள்கள் நிர்வாகம்.

41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.

1979 மார்ச் 30]

46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்.

48—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு ஆகியவை—11—4—1979, (புதன்கிழமை) அன்று எடுத்துக்கொள்ளப்படும்.

மற்ற நிகழ்ச்சிகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி நடைபெறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-29 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(11) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் : எதுவுமில்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS